**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 94/2019 |
| Name | : Nagendran |
| P.W. | : 1 |
| Father Name | : Pandi |
| Village | : Dindigul |
| Taluk | : Dindigul |
| Caste | : |
| Calling | : Driver |
| Religion | : |
| Age | : 42/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.02.2022

நான் திண்டுக்கல்லில் குடியிருந்து டிரைவராக வேலை செய்கிறேன். கடந்த 21.05.2019 ம் தேதி நான் கணியூரில் வாகனம் ஓட்டிக்கொண்டிருந்தேன். மாற்றுத்திறனாளிகள் பாட்டுபாடும் வண்டியில் வந்தோம். மாலை 06.45 மணிக்கு அப்போது மடத்துக்குளத்தில் இருந்து காரத்தொழுவு ரோட்டில் வண்டி ஓட்டி சென்றேன். நான் அங்கு சென்று வண்டியை நிறுத்திவிட்டேன். அதன் பின்னர் எங்கள் வண்டி ரிவர்ஸ் வரவேண்டி கருப்பையா என்பவர் கீழே இறங்கி நின்றார். எனது வண்டிக்கு பின்னால் ரோட்டின் ஓரத்தில் இடதுபுறம் நின்றார். ஆஜர் எதிரி காரத்தொழுவில் இருந்து மடத்துக்குளம் நோக்கி அதிவேகமாக பைக்கில் வந்து கருப்பையா மீது மோதி விட்டார். கருப்பையாவிற்கு தலையில் அடிப்பட்டது. நான் வண்டியில் உட்கார்ந்து அதைப்பார்த்து வண்டியில் இருந்து இறங்கி ஓடி வந்தேன். வண்டியை ஓட்டி வந்தவர் யார் என்று

தெரியவில்லை. அவர் நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் இல்லை தெரியவில்லை. ஆம்புலன்சிற்கு போன் செய்து உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ. 1 ஆகும். என்னை போலீசார் விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பார்வையற்றோர் இசைக்குழுவில் டிரைவராக உள்ளேன் என்றால் அப்போது இருந்தேன். தற்போது இல்லை. நான் வேலை பார்த்த போது அந்த இசைக்குழுவின் உரியையாளர் யார் என்றால் சந்திரசேகர் ஆவார். சந்திரசேகர் எந்த ஊர்க்காரர் என்றால் திண்டுக்கல் ஆவார். நான் எந்த வாகனத்தில் வந்தேன் என்றால் டாடா ஏஸ் வாகனத்தில் வந்தேன். அந்த வாகனத்தில் மொத்தம் எத்தனை பேர் வந்தோம் என்றால் 4 பேர் வந்தோம். வண்டியில் இருக்கும் ஆட்களுக்கு உணவு, வாங்கி கொடுக்கும் செலவு யாருடையது என்றால் உரிமையாளருடையது. நான் வந்த வாகனம் சரக்கு ஏற்றி செல்லும் வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் எண் என்ன என்றால் TN 57 AF 9808 பொதுவாக சரக்கு வாகனத்தில் ஆட்களை அழைத்து செல்லக்கூடாது என்றால் சரிதான். பார்வையற்றோர் மற்றும் ஊனமுற்றோர் பின்னால் உட்கார்வதால் வாகனத்தின் பின்புறம் டெண்ட் போட்டிருப்பார்கள் என்றால் சரிதான். அங்கு அமர்ந்து தான் பாடுவார்கள் என்றால் சரிதான். அந்த பாட்டு பாடும் உபகரணங்கள், ஜெனரேட்டர்கள் இருக்கும் என்றால் சரிதான். நான் போலீசில் புகார் கொடுத்த போது அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகார் யார் எழுதினார்கள் என்றால் பெயர் தெரியாது எஸ்.ஐ எழுதினார். வண்டியின் வாகனங்கள் போலீசில் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. இறந்து போனவர் கண் பார்வையற்றவர் என்றால் சரியல்ல. அவருக்கு கண் பார்வை நன்கு தெரியும். இறந்து போன நபர் எந்த ஊர் என்றால் திருச்சி ஆவார். பார்வையற்றோர்களை வைத்து பாட்டு கச்சேரி நடத்துவதற்கு அனுமதி வாங்கி உள்ளோமா என்றால விடுதியில் வைத்துள்ளார்கள் என்னிடம் இல்லை. விபத்து நடந்தது எந்த இடம் என்று எனக்கு தெரியுமா என்றால் பாரதி நகர் ஆகும். பாரதி நகர்

மடத்துக்குளம் – காரத்தொழுவு ரோட்டில் எங்கு உள்ளது என்றால் கணியூர் தாண்டிய உடன் ஒரு பள்ளி இருக்கும் அதன் அருகில் உள்ளது. நான் சொல்வது போல் பாரதி நகல் என்ற இடம் மடத்துக்குளம் – கணியூர் ரோட்டில் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் பகுதி ஆள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். விபத்தை பார்த்து கூட்டமாக வந்தார்கள் என்றால் சரிதான். இறந்து போன நபர் எதற்காக வண்டியை விட்டு கீழே இறங்கினார் என்றால் அவர் கலெக்சன் பார்ப்பதற்காக இறங்கினார். நான் எனது முதல் விசாரணையில் அவர் ரிவர்ஸ் பார்ப்பதற்காக இறங்கினார் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நான் வண்டியின் டிரைவர் சீட்டில் உட்கார்ந்து இருந்ததால் பின்னாடி என்ன நடக்கிறது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. விபத்து நடந்த போது எத்தனை மணிக்குள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றால் ½ மணி நேரத்திற்குள் கொண்டு சென்றோம். காவல் நிலையத்திற்கு எப்போது புகார் கொடுத்தோம் என்றால் பத்து நிமிடத்தில் தகவல் கொடுத்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது கிழமேல் ரோடு என்றால் சரிதான். நான் ரோட்டின் மேல்புறத்தில் தான் வண்டி நிறுத்தி இருந்தேன் என்றால் சரிதான். மடத்துக்குளத்தில் இருந்து செல்லும் போது இடது புறம் நடந்தது. வண்டியில் இருந்து இறங்கிய தெரியாமல் நான் தான் ரிவர்ஸ் எடுத்து தான் இறந்து போனவர் மீது மோதினேன் என்றால் சரியல்ல.நான் திடீரென்று எந்த வித சைகையும் செய்யாமல் பின் நோக்கி வாகனத்தை செலுத்தி இறந்தவர் மீது மோதி எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. கருப்பையா இறப்பதற்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவரகது இழப்பீடு பெற வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.